www.padippakam.com

TAMIL DANSK VENSKABS FORENING
DANMARKSGADE 10

# வெளிச்சம்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காணிக்கை



"உன்னதமான தமிழீழதாயகத்தின் விடுதலைக்காக தங்களுடைய
வாழ்வை, இளமையை, உயிரை அர்ப்பணித்து இறுதி மூச்சுவரை
போராடி வீரமரணமடைந்த விடுதலைவேங்கைகளுக்கும்,
மரணித்த தமிழீழமக்களுக்கும் இந்த நூலை
காணிக்கையாக்குகின்றோம்!

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

***Liberation Tigers of Tamil Eelam***


**டென்மார்க்கிளை**

படிப்பகம்

www.padippakam.com

# எங்களின் தாயகம் நெருப்பு நீரிலே......

மண்ணுளயாவையும்இனியவானமும் எங்களின் பரம்பரைச் சொந்தமாம்..
அப்புவும் ஆச்சியும் தோன்றி மகிழ்ந்த பூமி இப்பூமியாம்..........
சண்டமார் கவிபாடித்திரிந்ததும் சபைகள் யாவுமே தமிழில் திளைத்ததும்
விந்தையாயிரம் செய்துமகிழ்ந்ததும் வேறு இடத்திலா?...
இல்லை எம் மண்ணிலேதான்.
தென்றல் மேனியைத் தீண்டிமகிழ்ந்ததும் தேகவியர்வை சிந்தி வளர்ந்ததும்..
கன்றுபோல நாம் ஓடித்திரிந்ததும் காதல் செய்து உருகிக் கிடந்ததும்...
நன்று நன்று என விடியும் வரையில் நாலு கோயில் திருவிழா பார்த்ததும்
நின்று போனது.
எங்களின் தாயகம் நெருப்புநீரிலே மூழ்கிக்கிடக்குது.
நெல் விளைந்து சரிந்து கிடந்ததும்
நீள நின்று நாம் புதிர் எடுத்ததும்..
புல் வெளியிலே மாடுகள் மேய்த்ததும்
பூசு பொலிவுடன் பள்ளிக்குப் போனதும்..
வல்லை வெளியைத் தாண்டி வண்டிலேறி சன்னதி போனதும்
செல் விழுந்திடாக்காலப்பகுதியில் தேசம் மகிழ்ந்த பூமி இப்பூமியாம்.
தேர்தல் காலச் சிரிப்புத் தலைவர்கள் தேசம் விட்டு சென்று மறைந்தனர்.
வாசமாலைகள் வாங்கிய தலைவர்கள் வரண்டபூமியை விட்டுப் பறந்தனர்...
நாசமாகிய தாயக தலைவிதி நம் இளைஞர்கள் கையிலே வந்தது..
எங்கள் திருநாடதனை எதிரி சூழ்ந்து
எந்நாளும் கொல்லுகிறான், கொளுத்துகிறான்...
தங்கமணித்தாயகத்தில் நினைத்தவாறு
தான் நடக்கமுடியவில்லை.
இதனை வெல்ல பொங்கியெழுந்த நம் இளைஞர்
புதுமை செய்தார் ..
போர்முனையில் பகைவிரட்டி சிரங்கள் கொய்தார்...
வெங்கொடுமை சாக்காடு விளைந்தபோதும்
வேங்கைகளின் போர்ப்பரணி காலம்...
மாங்குயில்கள் பாடிவந்த பூமியிலே
குண்டுவெடி மரணஓலம்.
ஏங்குகின்ற இதயங்கள்...
எழில் இழந்த எங்களது கன்னியர்கள்..
இதனை மாற்ற தூங்குகின்ற தமிழினத்தை எழுப்ப வேண்டும்.
துடித்தெழுந்து பகைவிரட்டி புதிய நாட்டை மீட்டிடவே
துடிக்கின்றோம்....
வேங்கை வீரர் வரலாற்றில் புதியதொரு சரிதம் செய்வார்கள்.
பேயுலாவிய காடுகள் தோறும் போர்க்கருவிகள் தூக்கிய
இளசுகள் போயுலாவுதல் புரிந்திடல் வேண்டும்....
இளசுகள் வந்து சேர்ந்தனர்—ஆயுதம் தூக்கினர்—
பாயுவெம் புலியாகினர்—வெற்றியை பங்குபோடவே
போர்க்களம் சென்றனர்......
தூக்கமின்றியே சோர்ந்தனர்—நல்லதாய்
சோறுமின்றியே சோர்ந்தனர்..
வீறுண ஏக்கமின்றியே போர்க்களம் நின்றனர்..
இளமைக் கால இனிமைகள் போயின.
எம்மை காக்கவென்று இவர்கள் காடு ஏகினர்...
கல்லு முள்ளு பட்டினி தாங்கினர்...
மீட்க வந்தனர் எங்களை...



# ஒரு போராளியின் நாட்குறிப்பு...



(இன்று போராட்டகளத்தில் நின்றுகொண்டிருக்கும் ஒவ்வொரு விடுதலைப்புலிவீரனின் இதயங்களில் ஆயிரமாயிரம்
கதைகள் இருக்கும். அவர்களுடன் பழகிய விடுதலைப்புலிகளின் வீரமரணங்கள், மரணகாலத்திலும் அவர்கள் காட்
டிய மகத்தான உறுதி, அவர்களின் ஆசாபாசங்கள் என்பன இன்று உயிருடன் இருக்கும் ஒவ்வொரு விடுதலைப்
புலிவீரனின் இதயத்திலும் பசுமையாக பதிந்துள்ளன. அப்படியான இதயம் ஒன்றிலிருந்து தன்னுடன் ஒன்றாக க
ளத்தில் நின்று, ஒன்றாக எதிரியை விரத்தியடித்து போராடியபோது வீரமரணமடைந்த "பெஞ்சமின், வதனன்
ஆகியோரை, அவர்களின் அந்த வீரம் செறிந்த இறுதிநாட்களை அவர்களின் தோழர் ஒருவர் நினைவு கூரு
கின்றார்........)

ஒவ்வொரு ஆயுதத்தையும் சேகரிக்கவும் அதனை எதிரியிடமிருந்து பாதுகாக்கவும் நாம் படும்பாடுகள்
கஷ்டங்கள் என்பன எழுத்தில் எழுதிவிடமுடியாதவை. அன்று சாவதற்கு முதல்நாள் இரவு பெஞ்சமின் க
தைத்த சில கதைகள் ஞாபகத்திற்கு வருகின்றது. "மச்சான் நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு போ
ராடுறம். நாங்கள் கஷ்டப்படுவது மற்றவையளுக்கு தெரியவேண்டுமென்று இல்லை. ஆனால் இவ்வளவு கஷ்
டங்கள் தியாகங்கள் ஒருபோதும் வீண்போககூடாது. அமிர்தலிங்கம் போன்ற ஆட்கள் தமிழீழம் வேண்டா
ம் என்று சொல்லிபோட்டு அன்னியனிடம் அடிமையாய் இருப்போம் என்றும் சொல்லுவார்கள். தற்காலி
க எலும்புத்துண்டுகளுக்காக எமது சனங்கள் தமிழீழம் வேண்டாம் என்று சொல்லுற நிலமை ஒருபோதும்
வரக்கூடாது." என்று சொன்னான். அமிரைப்பற்றி எவ்வளவு சரியான கணிப்பு வைத்திருந்தான் அவன். தியா
கிகளின் வார்த்தைகள் தீர்க்கதரிசனங்கள்.

பெஞ்சமினுடன் பழகிய அந்த இறுதிநாட்களை நினைக்கிறேன்..
பெஞ்சமின்! அந்த நாட்கள் மீண்டும் வராதா என்று ஏங்குகின்றேன். கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு
அடிக்கடி இனவெறிராணுவம் தனது சிப்பாய்களை மாற்றுவது வழக்கம். அந்த வாகனத்தொடர் செல்லு
ம்போது யாராவது ஒரு ராணுவவீரன் மனநோயாளியாக மாறினால் வழியில் எதிர்ப்படும் பொதுமக்க
ளை சுட்டுதள்ளுவது வழக்கமாக இருந்தது. இப்படியான காட்டுமிராண்டித்தனமான ராணுவவாகனத்தொ
டர்ஒன்றை தாக்கி இனவெறிப்படைக்கு பாடம் புகட்டநினைத்தோம். ஏழு தொடக்கம் பதின்மூன்று
ராணுவவாகனங்கள் அந்ததொடரில் வரும். எனவே இதற்கு ஏற்றபடி எமது தாக்குதல்திட்டத்தை தயா
ரித்தோம். தாக்குதலுக்கு தலைமை தாங்கிய பிரபா அண்ணை குறைந்தது பதினைந்து ரைபிள்தன்னும் உருப்
படியாக எடுக்கவேண்டும் என்று எம்மிடம் சொன்னார். கண்ணிவெடியில் சிக்கினால் உருப்படியாக ஆயுதங்கள்
பொறுக்குவது கடினம் என்றாலும் இந்தமுறை எப்படியாவதும் பதினைந்து ரைபிள் எடுத்தேதீருவது என்று
தீர்மானித்துக்கொண்டோம்.......

www.padippakam.com

காட்டுப்பிரதேசத்தில் நடைபெறவிருக்கும் தாக்குதல் என்றபடியால் அதற்கு ஏற்றவிதத்தில் உருமறைப்பு செய்துகொண்டோம். தாக்குதல் நடாத்த தெரிவுசெய்யப்பட்ட கொக்காவிலுக்கு நடந்தே புறப்பட்டோம். முதல்நாள் மாலை 7மணிக்கு புறப்பட்ட நாங்கள் இரவு 12 மணிக்கு காடுகளின்நடுவிலேயே படுத்துகொண்டோம். ஏனென்றால் களைப்பு, பசி என்பனவற்றால் நாம் அசதி அடைந்திருந்தோம். காடுகளுக்கிடையே நடந்து வந்துகொண்டிருந்த போது வதனன் அடிக்கடி மரங்களுடன் மோதுப்பட்டான். பாவம், சக்திக்கு மீறிசெயற்பட கஷ்டமாக இருந்தது அவனுக்கு. இரவு 12 மணிக்குகாடுகளுக்கு நடுவே "சரி நாளைக்கு நடப்பம், இப்ப படுப்போம் என்று பிரபாஅண்ணை சொன்னபோது அப்போதுள்ள நிலையில் இனியில்லைஎன்ற அளவு மகிழ்ச்சியை எமக்கு கொடுத்தது. நடந்துவரும் போது எமது போத்தல்களில் இருந்த தண்ணீரையும் காலிசெய்துவிட்டோம். வதனன் தன்னிடமிருந்த பிஸ்கட்பெட்டியை எடுத்தான். "நாளைக்கு யார் யார் உயிரோடு இருக்கப்போகின்றோமோ? இருக்கும் வரைக்கும் சந்தோசமாக இருப்போம்" என்று சொல்லி எல்லோருக்கும் பிஸ்கட் வழங்கினான். பிஸ்கட்டை சாப்பிட்டதும் வதனன் சீக்கிரமாகவே நித்திரையாகி விட்டான்.

பெஞ்சமின் இரவிரவாக யோசித்துக்கொண்டேயிருந்தான். "என்ன மச்சான் யோசனை?" என்றேன். "ஒன்றுமில்லை மச்சான்! இயக்கத்துக்கு வந்ததிற்குப் பிறகு இன்னும் வீட்டுக்குப்போகவில்லை. வீட்டில் குடும்பப்பொறுப்பு முழுவதும் அம்மாதான். அப்பாவை ஆமிக்காரன்கள் ஒதியமலையில் வைத்து சுட்டுப்போட்டாங்கள். என்னைத்தவிர மற்றப்பிள்ளைகள் எல்லாம் பொம்பிளைப்பிள்ளைகள் தான். அம்மா என்னைத்தான் நம்பிஇருந்தவ. ஆனாலும் வீட்டுக்கடமையை விட தாயக விடுதலைதான் முக்கியம் என்றபடியால் இயக்கத்துக்கு வந்தேன். இந்த தாக்குதலில் தற்செயலாக நான் செத்துபோனாலும் என்ரை படம் ஒன்று பிரேம்போட்டு அம்மாவுக்கு குடு மச்சான்" என்று சொன்னான். அவன் சொன்னதை கேட்க நெஞ்சுக்குள் ஏதோ செய்தது.

வாழ்க்கையில் ஒவ்வொருவனும் எதுஎதற்கெல்லாம் ஆசைப்படுவார்கள்[redacted]ஆனால் இவனோ தான் செத்துப்போனால் தன்னுடைய படம் ஒன்றை அம்மாவுக்கு கொடுத்துவிடு என்று சொன்னது எனக்கு வேதனை கலந்த சங்கடமாக இருந்தது.

அடுத்தநாள் எமது பிரயாணத்தை தொடர்ந்தோம். குறிப்பிட்டஇடத்தை வந்தடைந்ததும் களைத்துவிட்டோம். போத்தலில் தண்ணீரும் முடிந்துவிட்டது. சாப்பாடும் முடிந்து விட்டது. தாக்குதல் நடாத்த திட்டமிட்ட இடத்தைஅடைந்து திட்டமிட்டபடி எமக்கென்று தெரிவுசெய்யப்பட்ட நிலைகளில் போய்நின்று கொண்டோம். அன்று முழுக்க ஆமி வரவே இல்லை.

அடுத்தநாள் பிற்பகல் மூன்று மணிக்கு ஆளுக்கு ஒருதுண்டு ரோட்டியும் ஒரு கிளாஸ் தண்ணீரும் கிடைத்தது. பிரபாஅண்ணை தான் பாதுகாப்பாக வைத்திருந்த ரொட்டிகளையும் தண்ணீரையும் எமக்கு தந்தார். முதல்நாள் தண்ணீரோ சாப்பாடோ இல்லாமல் இருந்த எமக்கு இதைச்சாப்பிட மிகவும் கடினமாக இருந்தது. தொண்டை காய்ந்திருந்த படியால் ரொட்டியை விழுங்கமுடியாமல் இருந்தது. தண்ணீர் ஜூஸ் போன்ற நிறத்திலிருந்தது. அனைவரும் ஜூஸ்தான் என்று எண்ணி மகிழ்ந்தோம். ஆனால் அந்த மகிழ்ச்சி அதிகநேரம் நீடிக்கவில்லை. ஜூஸ் நிறத்திலிருந்தாலும் அது வெறும் தண்ணீர்தான் எனவும் காட்டில் மாடுகளும் யானைகளும் உழக்கிய தண்ணீர் என்றபடியால்தான் அந்தநிறத்தில் இருக்கின்றது எனவும் அறிந்து கொண்டோம். ஆனாலும் அன்றுஇருந்த தாகமான நிலையில் அந்த தண்ணீர் தேவாமிர்தமாக இருந்தது. நல்ல வேளையாக அந்த தண்ணீருக்கு குளோரீன் போடப்பட்டிருந்தது.

அன்று இரவு போராட்டம்பற்றியும் போராட்டத்தை திசைதிருப்பும் சக்திகள் பற்றியும் வதனனும் பெஞ்சமினும் கதைத்தனர். அன்றிரவு படுக்க 1.30 மணியாகிவிட்டது. அன்று வதனின் மணிக்கூட்டை தரும்படி ரதன் கேட்டுக்கொண்டேயிருந்தான். "இது ஒருவர் தனது ஞாபகமாக தந்தது. இதை நான் சாகும்வரை கட்டிக்கொண்டிருக்கவேணும் மச்சான்" என்று வதனன் சொன்னான்.

அடுத்த நாள்காலையில் தாக்குதல்நடாத்த திட்டமிட்டஇடத்தில் எமக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் நிலையெடுத்துக்கொண்டோம். காலை ஏழுமணிக்கு இராணுவவாகனத் தொடர்கள் வந்தன. ஏழு தொடக்கம் பதிமூன்றுவாகனங்கள் வரும் என்று கணக்குப்போட்டிருந்தோம்... ஆனால் அன்று முப்பத்திரண்டுவாகனங்கள் தொடராவந்தன. ஆனாலும் தாக்குதல்நடாத்துவது என்று தீர்மானித்துக்கொண்டோம். முதலாவதாக ஒரு ராணுவலொறி வந்தது. லொறிக்கு கண்ணிவெடி வைத்தோம். லொறி நொருங்கியது. அதற்குள் இருந்த ராணுவத்தினர் மாண்டனர். பின்னால் வந்த ராணுவவண்டிகளுக்கு R.P.G யால் பெஞ்சமின் அடித்தான். மேலும் பல ராணுவத்தினர் கொல்லபபட்டனர். வண்டிகளில் வந்த ராணுவத்தினர் ரோட்டில் குதித்து எம்மைநோக்கி தாக்குதல்நடாத்தினர். பெஞ்சமினின் R.P.G ரொக்கற்றுக்கு பாதுகாப்பாக நான் ஏ.கே யுடன் சண்டைசெய்துகொண்டிருந்தேன்....... (மறுபக்கம்)



www.padippakam.com

வதனன் கண்ணிவெடியில் சிக்கிய ராணுவவண்டியை நோக்கிப்பாய்ந்து சென்றான். இறந்த ராணுவத்தினரின் ஆயுதங்களை எடுத்தான். எடுத்த ஆயுதங்களை எம்மைநோக்கி வீசியெறிந்தான். வீழ்ந்து கிடந்த ராணுவத்தினரின் உடமைகளை பரிசோதித்தான். ராணுவவண்டிக்குப்பின்னால் படுத்திருந்து தாக்குதல்நடாத்திக்கொண்டிருந்த ராணுவத்தினர் வதனனை நோக்கி துப்பாக்கி பிரயோகம்செய்தனர். காயமடைந்திருந்த ராணுவத்தினன் ஒருவன் வதனனை சுட்டுவிட்டான். துப்பாக்கிகுண்டு வதனனை துளைத்துச் சென்றது. வதனனால் எதுவும் செய்யமுடியவில்லை.....
வீழ்ந்து கிடந்த ராணுவத்தினரிடமிருந்து எடுத்த ஆயுதங்களில் கையில் வைத்திருந்தவற்றை எம்மைநோக்கி வீசி எறிந்தான். "டே. கெதியாக வா" என்றோம். பிரயோசனமில்லை. "மச்சான் என்னை காவிக்கொண்டு போகநினைத்தால் உங்களது உயிருக்கும் ஆபத்து வந்துவிடும். என்னை சுட்டுவிட்ட ஆமிக்காரனை நான் சுட்டு விட்டேன். அவனுடைய ஆயுதத்தையும் கட்டாயம் எடுங்கோ" எனறு சொல்லிவிட்டு வதனன் தன்னுடைய மணிக்கூட்டையும் தன்னுடைய ஏ.கே துப்பாக்கியையும் எம்மை நோக்கி வீசினான். எமக்கு ஆச்சரியம்!... தனது ஏ.கே யை யாராவது தொட்டால் "டே. தொடாதே, அது என்னுடையது" என்று பக்குவமாக கையாள்வான். தன்னுடைய துப்பாக்கியை அவன் எப்போதும் துடைத்து துப்பரவாக வைத்திருப்பான். இன்று அதை தூக்கியெறிகிறானே என்று யோசித்தபோது" "மச்சான், நான் குப்பி கடித்துவிட்டேன். எல்லாவற்றையும் எடுங்கோ" என்று சொல்லி விட்டு வதனன் சரிந்து விழுந்தான்.

சண்டை மிகவும்மும்மரமாக நடந்துகொண்டிருந்தது. பின்னால் வந்துகொண்டிருந்த சலாடின வகை ஆமட்வண்டிக்கு பெஞ்சமின் R.P.G றொக்கட்டால் அடித்தான். ஒரு முறை ஓடிவிட்டுநின்றது. அடுத்தஅடி அடித்தபோது அந்த ஆமட்வண்டி நொருந்து கொண்டது. அந்த வண்டியிலிருந்த அனைத்து ராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். பெஞ்சமின் தொடர்ந்து றொக்கட்டால் தாக்கினான். பெஞ்சமினின் திறமையை நான் மனதுக்குள் மெச்சிக்கொண்டேன்.

அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது. உடன் நின்றுகொண்டிருந்த பெஞ்சமினுக்குமேல் இராணுவத்தினரின் "நேபாம்" குண்டு ஒன்று வீழ்ந்தது. வீழ்ந்தவுடன் தீப்பற்றியெரியும் அந்த குண்டினால் தாக்கப்பட்டு பெஞ்சமின் தீப்பற்றி எரிந்தான்..... "மச்சான் உருளடா..உருள்" என்றேன். உருண்டான்...தீ அணைந்து கொண்டது....பெஞ்சமினின் R.P.G அவனுக்குப்பக்கத்தில் உடைந்து இரண்டாகக் கிடந்தது. எமது கண்களுக்கு முன்னாலேயே பெஞ்சமின் வீரமரணத்தை தழுவிக்கொண்டான்....



இரவிரவாக என்னோடு கதைத்துக்கொண்டிருந்த இருவர் என்னுடைய கண்ணுக்கு முன்னாலேயே மரணித்தபோது நான் மிகவும் நொந்துபோனேன்...நேற்று இரவு அவர்கள் என்னுடன் கதைத்த கதைகளை எண்ணிப்பார்த்தேன்..அவர்கள் ஆசையுடன் கதைத்தகதைகள் என்னவாகும்..அவர்களின் இலட்சியகனவுகள் நனவாவதை அவர் பார்க்கவில்லையே...தான் மரணமடைந்த பின்னர் தன்னுடைய போட்டோவை தன்னுடைய தாய்க்கு அனுப்ப சொன்ன பெஞ்சமினின் நினைவுகள் இதயத்தை பிழிந்தது..எதிரிகளின் ஆயுதங்களை பறிப்பதில் உறுதிகொண்டிருந்த வதனன் என் நெஞ்சம்முழுவதும் நிறைந்திருந்தான்...ராணுவத்திடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களுடன் திரும்பினோம்...வழி வழியே வதனனும் பெஞ்சமினும் கதைத்த கதைகள்தான் நினைவுக்கு வந்தன......... போகும்போது கலகலப்பாக கதைத்துக்கொண்டு வந்தவர்களை வரும்போது சடலமாக காணுகின்றோம்.

இவர்களின் தியாகங்கள் ஒருபோதும் வீண்போக விடக்கூடாது..வறுமை.... தந்தைஇல்லாமல் தத்தளிக்கும் குடும்பம்....பெஞ்சமினைத் தவிர மற்றைய பிள்ளைகள் பெண்பிள்ளைகள்... இப்படியான குடும்பநிலைமையிலும் தேசத்தின் விடுதலைக்காக போராட முன்வந்த பெஞ்சமின் போன்றவர்களின் தியாகங்கள்தான் இன்றைய எமது தமிழீழ விடுதலைப்போராட்ட வளர்ச்சியாகும்............... வதனன், பெஞ்சமின்....எனது இனிமையான நண்பர்களே...உங்களின் வாழ்க்கை உறுதிக்கு உதாரணமாகும்.. உங்களின் தியாகங்களை அர்த்தமுள்ளவையாக்குவோம்...உங்களது விருப்பப்படியே அன்னியநாய்களிடம் எமது போராட்டத்தை அடகுவைக்கும் கேவலமான பிறப்புகளை விடுதலைத் தீக்கு இரையாக்குவோம்........

# போராளிகள் என்றும் இறப்பதில்லை

வழக்கம்போல அன்றும் அவன் அதிகாலையிலேயே நித்திரையை விட்டு எழுந்து தூங்கிக்கொண்டிருந்த மனைவிக்கும் பிறந்து இரண்டுமாதமே ஆகியிருந்த தனது குழந்தைக்கும் முத்தம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான். மக்கள் மத்தியில் அவர்களின் அன்றாடப் பிரச்சனைகளில் கலந்து கொண்டு அவர்களிற்கு போராட்டம், புரட்சி, விடுதலை போன்றவற்றைப்பற்றி தெளிவு படுத்தி அவர்களையும் இப்போராட்டத்தில் பங்கு கொள்ளுமாறு அணிதிரட்டுவதே அவனது நாளாந்த வேலை.

கல்குடா மக்களோடு அனேகமாக ஒவ்வொரு வீட்டிலும் அவர்களுள் ஒருவனாகப் பழகியவன்; மக்களின் அன்புக்குப் பாத்திரமானவன். அன்றும் அவன் கல்குடாவில் நிற்கும்போது சுமார் நூறு கொமாண்டோக்கள் ஊரைச்சுற்றி வளைத்துவிட்டனர். எந்தத் திசையில் திரும்பினாலும் கொமாண்டோக்கள் என்றநிலையில் தப்பிக்க முனைந்தபோது கண்டுவிட்டனர்.

அதோ குமார் சுடு என்றான். அடுத்தகணம் அவன் காலைக் குண்டுகள் துளைத்துவிட்டன. அவன் ஓடத்தொடங்குகிறான்; அவர்கள் துரத்துகிறார்கள். அரைமைல் தூரம் ஓடியிருப்பான் மேலும் ஓடுவதற்கு வலுவிழந்து தள்ளாடி விழுந்துவிட்டான்.


பின்னால் கொமாண்டோக்கள் துரத்துவதை உணர்ந்தான், இனிமேல் தான் தப்ப முடியாது அவர்கள் பிடித்துவிடப் போகிறார்கள் என எண்ணியவன் சயனைட் குப்பியை வாயினுள் வைத்தான். ஏதோ சிந்தித்தவன் குப்பியைக் கடிக்கவில்லை, தூக்கி எறிந்துவிட்டு இடுப்பில் செருகியிருந்த குண்டை எடுத்தான், கிளிப்பைக் கழற்றிவிட்டு கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு குப்புறக் கிடந்துவிட்டான்.

துரத்தி வந்த கொமாண்டோக்கள் இரண்டு பேர் அவன் இறந்து விட்டான் என நினைத்துத் தூக்கவும் அவன் குண்டை வெடிக்க விட்டான். இரு கொமாண்டோக்களும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட குமார் தனதுயிரை தமிழீழ மண்ணுக்கு அர்ப்பணித்தான்.

தான் இறப்பது தவிர்க்க முடியாது என்று தெரிந்த கணத்திலும் இறக்கும் போது கூட எதிரியையும்அழிக்கவேண்டும் என சிந்தித்த மாபெரும் தியாகியவன் இன்று எம் மத்தியில்இல்லை. ஆனால் அவனின் உணர்வுகள் என்றும் எம்மை விட்டகலாது.

### எங்கள் நண்பன்

மெல்ல இருள் விலகும்.....
அந்த அமைதியான
புலரும் பொழுதில்.......
இருளைக் கிழித்து எழும்
இளைய சூரியனின்
சிவப்பு கிரணங்களாக
அவன் எம்மை தழுவுவான்.
இனிய குரலில் இதமாக கூவி
விடியலை அழைக்கும்
வனப்பறவைகளின் அணிவகுபில்
அவன் இருப்பான்........
புதிய சீருடை அணிந்து
புதிய துப்பாக்கி ஏந்தி
புதிய அனுபவம் பெற
எங்கள் பாசறைக்கு வரும்
புதிய தோழனின் சாயலில்
அவன இருப்பான்!




### உறுதி

"எங்கள் குளங்களில் மடுகளில்
குருதி தேங்கலாம்......
மீண்டும் ஒரு நாள்
அந்த குருதிச் சேற்றில்
ஒரு கரு உதிக்கும்!
உயிர்களின் பரிணமம் நிகழும்..
புதிய மனிதன் எழுவான்!
நிச்சயம் அவன்
சுதந்திரமானவன்!

### உன்னதமான விடுதலைக்காக...

உடல் நாராய் கிழிந்து
உதிரம் ஆறாய் ஓடும்...
தெரிந்துதான் வந்தோம்!
தமிழீழத்தின் விடுதலைக்காக
மரணம்! அது எமது
கழுத்தில் தொங்குகின்றது..
நாம் அதை அணைக்கும்
நேரத்தில் அது எம்மை
அன்னை பூமியின் மடியில்
நீண்ட உறக்கத்துக்கு அனுமதிக்கிறது....

www.padippakam.com



குண்டு பட்டுப்போனவர் எத்தனை..
குடல் சரிந்து போனவர் எத்தனை..
வண்டியில் வரும் போது கடலிலே
வாழ்விழந்து போனவர் எத்தனை..
கொண்ட இலட்சியம் குன்றிடாத—எங்கள்
கொள்கை வீரரின் காலடி மண்ணிலே
நின்று கொண்டொரு போர்க் கொடி
தூக்குவோம்..
நிச்சயம் ஒரு தாயகம் காணுவோம்..
எத்தனை எத்தனை இளமைகள் போயின
எத்தனை எத்தனை இனிமைகள் போயின...
காதல் வயதினிலே கருத்தழியும் வயதினிலே
சாதல் வலைவிரித்து சாப்பிட்டது எத்தனைதான்..
தாலாட்டி முத்தமிட்டு தடுக்கினிலே சீராட்டி
பாலூட்டி வளர்த்த பாசமுகம் பாராமல்
அன்னை முகம் பாராமல், தந்தை முகம் பாராமல்..
சின்ன உடலங்கள் தெருவினிலே கிடந்தனவே..
செருக்களத்தில் மாற்றார் சிரமறுக்கும் போதினிலே
உருக்குலைந்து போன உடல்கள்தான் எத்தனை..
எல்லைப் புறநகரில் எதிரிகளின் பாசறைகளுள்
வில் முறிந்து போன வீரர்கள் எத்தனை எத்தனை...
கண்ணிவெடி வைக்கும் களப்பணியில் எத்தனையோ
பொன்னுடலங்கள் இப் பூமியில் விழுந்தனவே...
களத்தில் மடியாமல் கடற்பேய்கள் தின்பதற்காய்
வள்ளத்தோடு எரிந்த வரலாறுகள்தான் எத்தனை
வென்றாக வேண்டும் விடுதலையை என்ற ஒரு ஏக்கத்தோடு
ஓடிவந்த படகினிலேவேதங்களான விடுதலைத்தீப் பூஉடலங்கள் எத்தனையோ..
உடலும் நாம் பார்க்காமல் உருக்குலைந்து போன உடலங்கள்தான்
எத்தனை எத்தனை...
சின்ன வயதினிலே. சிரிக்கின்ற பருவமதில் கன்னியரின் பின்னால் நாம்
காற்தடங்கள் பதித்திருந்தோம்..
பின்னல் அசைவினிலே பேதலித்துப் போயிருந்தோம்...
ஓர விழிப்பார்வை ஒன்றிற்காய் நாம்
ஊரெல்லாம் நாம் ஊர்வலங்கள் போயிருந்தோம்..
கை பிடித்தோம்—கால் பிடித்தோம்
காதல் என்ற எண்ணமதில்மெய்தழுவ நாம் மேய்ச்லிட்ட இளம்வயதில்
முற்றும் துறந்த முனிவர்களைப் போல நாட்க்காய் செத்தவரை
கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்...
கடலில் மடிந்தார்கள்—காட்டிடையே செத்தார்கள்..
படகோடு எரிந்தார்கள்—பாலமுத வாயாலே குப்பி அடித்தார்கள்..
குண்டணைத்துச் செத்தார்கள்
தப்போம் என நினைத்துச் சயனைட் அடித்தார்கள்..
எம்மால் முடியாது .—இவர்களை பாடுதற்கு என்னால் முடியாது
இவர்களை நான் பாடுவதற்குள் கண்ணீர் வழிவதை என் கை தடைக்க
முடியாது.....
வார்த்தைகளைத் தேடி வலம் வந்த போதினும்
போர் தேர் ஏறிய எம் புனிதர்களைப் பாடுதற்கு
வார்த்தை கிடைக்கவில்லை—வரிகள் ஒன்றும் தோன்ற வில்லை

www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகள்
## *Liberation Tigers of Tamil Eelam*

TAMIL EELAM

### – ஜேர்மன் கிளை –

காலத்தால் அழியாத தியாகமறவர்களை எந்நாளும் போற்றி அஞ்சலித்து வணங்குவது தமிழீழமக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். எழுத்திலோ, சொல்லிலோ எழுதமுடியாத துன்பங்களுக்கு மத்தியில் மகத்தான விடுதலைக்காக மரணித்த விடுதலைப்புலிகளையும், மாபெரும் உந்து சக்தியாக இருந்து உயிர் நீத்த மக்களையும் அஞ்சலிப்பது உயிர்வாழும் தமிழனது கடமையாகும்.

இப்படியான அஞ்சலிநிகழ்ச்சியாக டென்மார்க்தமிழர் நலன்புரி மன்றத்தால் "வீரவணக்கநாளும் கலைமாலையும்" நடாத்தப்படுவதையிட்டு அகமகிழ்கின்றோம். எவ்வளவு சோதனைகள், துன்பங்கள் ஏற்பட்டாலும் விடுதலைக்காகப் போராடும் இலட்சியஉறுதி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளை, மகத்தான விடுதலைப்போராட்டத்தை அழிக்கமுடியாது என்பதை தியாகமும் அர்ப்பணிப்புகளும் நிறைந்த விடுதலைப்போராட்டம் சான்றுகளுடன் நிரூபித்துள்ளார்கள். எமது தலைவர் கூறியதுபோல "போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது" என்பதும் வரலாற்றுமுக்கியம் வாய்ந்த வாக்கியங்களாகும்.

இன்று எமது மண்ணிலே எமது மக்கள் துன்பநிலையில் வாழ்ந்தாலும் உடைக்கமுடியாத இலட்சியஉறுதியுடன்வாழ்கிறார்கள். அவர்களின் வேதனைகளை எண்ணினால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களால் ஆடம்பரமான கேளிக்கைகளிலோ, களியாட்டங்களிலோ கலந்து கொள்ள அவர்களின் மனம் இடம்தராது.

இந்த நிலையில் எமக்காகவே தம்முடைய வாழ்வை அர்ப்பணித்த வரலாற்றுநாயகர்களை அஞ்சலித்து துதிக்கும் "வீரவணக்கநாளும் கலைமாலையும்" என்ற நிகழ்ச்சி இங்கு வாழும் தமிழீழமக்களுக்கு ஆத்மதிருப்தியை நிச்சயம் ஏற்படுத்தும். இந்த நிகழ்ச்சி சிறப்புற தமிழ்தாயை துதித்து எமது இதயபூர்வமான நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

அன்புடன்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
மேற்கு ஜேர்மன் கிளை

### – பிரித்தானிய கிளை –

மனித சமூகத்தின் வாழ்க்கைநிலை – அது தாங்கிநிற்கும் சமூகபொருளாதாரநிலை என்பனவற்றின் அழகியல் வெளிப்பாடுதான் கலை இலக்கியங்கள் என்ற புரட்சிகர அர்த்தம்உருவாகி வருகின்றது. அந்த வகையில் அன்றைய தமிழீழமக்களின் போர்க்காலவாழ்க்கை நிலை – புதியசிந்தனைகள் – புதியசெயற்பாடுகள் என்பன கொண்டதான கலைநிகழ்ச்சிகள் இன்று உலகம்பூராவும் வாழும் தமிழீழமக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் டென்மார்க் தமிழர் நலன்புரி மன்றத்தால் நடாத்தப்படும் "வீரவணக்க நாளும் கலைமாலையும்" நிகழ்ச்சி ஒரு சிறப்பான முயற்சியாகும்.

இன்று எமது மக்கள் மீ சுதந்திரப்போராட்டம் தன்மீது சுமத்தப்பட்ட இராட்சத இந்தியஇராணுவ பூதத்தை வெற்றிகொள்ளும் வலுவைப்பெற்று வருகின்றது. இராணுவ அரசியல் முனைகளில் சர்வதேசஅரங்கில் எமது சுதந்திரஇயக்கம் வளர்ச்சிகண்டு வருகின்றது. எமது மக்களின் சுதந்திரமான – சுபீட்சமான – அமைதியான புதியவாழ்க்கையை கட்டியெழுப்ப எமது விடுதலைப்போராட்டம் ஆக்ரோசமாக போராடிவருகின்றது. பல நூறு இளையவேங்கைகளின் அர்ப்பணிப்புகளால் எமது போராட்டம் வலுப்பெற்று வருகின்றது. எமது விடுதலைதாகம் வலுப்பெற்று வருகின்றது.

எமது தாகமும் வேகமும் சிங்களஇனவாத, இந்தியஆக்கிரமிப்பு சக்திகளை எதிர்த்து மட்டுமல்ல எமக்குள் மூட்டிமோதும் சமூக சாதி முரண்பாடுகளையும், எமது சமூகம் தாங்கிநிற்கும் பிற்போக்கு மூடத்தனங்களையும் எதிர்த்தும் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றது. இந்த பின்னைய நோக்கங்களை வெற்றிகொள்ள கலை இலக்கியங்களும் உதவவேண்டும்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

அன்புடன்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
பிரித்தானிய கிளை

படிப்பகம்

# தியாக தீபங்கள்

தமிழீழ விடுதலைப்போராட்டம் இன்று பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சிகண்டு விடுதலை இலட்சியத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது. உலகின் நான்காவது பெரிய ராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தர்மயுத்தத்தின் முன்னர் தோல்விகண்டு தலைகுனிந்து நிற்கின்றது. உலகின் எந்தவொரு ஆக்கிரமிப்புசக்தியாலும் வெல்லப்படமுடியாத பெரும்சக்தியாக தமிழீழ விடுதலைப்போராட்டம் வளர்ச்சி கண்டுள்ளது. உலகின் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள்களுக்கு தமிழீழ விடுதலைப்போராட்டம் ஓர் நம்பிக்கை சக்தியாக நடைபோடுகின்றது. பதினைந்து வருடங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின்வளர்ச்சி, மக்கள் ஆதரவு என்பன மாபெரும் புதிராக உலகின் பத்திரிகையாளர்களுக்கும், அவதானிகளுக்கும் உள்ளது. பாரிய டாங்கிகள், விமானங்கள், லட்சக்கணக்கான துருப்புகள் சகிதம் வந்திறங்கிய இந்தியராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் தோல்விகண்டு வருவது உலகத்துக்கு இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது... ஆனால் தமிழீழ மக்களாகிய எங்களுக்கு அந்த ரகசியம் தெரியும். அதுதான் விடுதலைப்புலிகளின் தியாகம், அதுதான் அர்ப்பணிப்பு, அதுதான் உறுதி..



லெப்டினன்ட்
சத்தியநாதன் (சங்கர்)



சீலன்

இத்தகைய எமது விடதலைப்போராட்டவளர்ச்சிக்கு அடித்தளமாக ஆயிரக்கணக்கான விடுதலைப்புலிகளின் சிந்திய ரத்தங்கள், வார்க்கை என்பன அடங்கிஉள்ளது. அந்த தியாக மறவர்களின் தியாகங்கள்தான் இன்றைய தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாறு ஆகும். தியாகத்தையும், உறுதியையும் எமது தலைவரின் நடைமுறையிலிருந்துதான் அனைத்து போராளிகளும கற்றுக் கொண்டனர். அமைப்பின் ஆரம்பகாலங்களில் வற்றாளைக்கிழங்கைத் தின்றும், பச்சைத்தண்ணீரைக்குடித்தும் அமைப்பின் வளர்ச்சியை உருவாக்கினார் எமது தலைவர். ஒரு சைக்கிளில் ஓடித்திரிந்து, பட்டினியுடனும், பொலீஸ் சுற்றிவளைப்புகளுக்கு நடுவில் தூங்காமல் பயணங்களை மேற்கொண்டுதான் எமது தலைவர் இந்த இயக்கத்தை கட்டிவளர்த்தார். இந்த அமைப்பு தடித்தசிவப்பு புத்தகத்தை கரைத்துக்குடித்த மேதாவிகளாளோ, பட்டப்படிப்பு சட்டத்தரணிகளாளோ ஆரம்பிக்கப்படவில்லை. இந்த அமைப்பு நெஞ்சில் உரமும், இதயம் நிறைய நம்பிக்கையும் கொண்ட எமது தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. எமது தன்னுடைய உறுதிகொண்ட செயற்பாடுகள் மூலம்தான் தியாகத்தினதும், போராட்டத்தினதும் கனபரிமாணங்களை போராளிகளுக்கு புகட்டினார். ஆரம்பகாலங்களில் ஆயுதங்களை சேகரிப்பதிலும், அவற்றை பாதுகாப்பதிலும் எமது பட்ட கஷ்டங்கள்தான் வரும்காலங்களில் எமது போராளிகளுக்கு ஆயுதங்களின் அருமையை உணர்த்தியது, தானே தனது கைகளால் தயாரித்த துப்பாக்கிக்குண்டுகளை பாவித்த மேஜர் ......

துரையப்பாவை சுட்டுக்கொன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதநடவடிக்கையை-புரட்சிகரசெயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். 8.2ம் ஆண்டில் இராணுவசுற்றி வளைப்பு ஒன்றின்போது சுடப்பட்டபோதும் ரத்தம் ஓட ஓட தாங்கள் தங்கியிருந்த வீட்டுக்குசென்று தன்னுடைய துப்பாக்கியை தன்னுடைய சகபோராளியிடம் ஒப்படைத்துவிட்டு மயங்கிவீழ்ந்த பின்னர் வீரமரணமடைந்த "சங்கர்" விடுதலைப்புலி தியாகவரலாற்றை தொடக்கி வைத்தான், இதனைப்போலவே மீசாலையில் ராணுவசுற்றிவளைப்பில் சுடப்பட்டபோதும் சகபோராளியிடம் தன்னுடைய துப்பாக்கியை ஒப்படைத்துவிட்டு தன்னை சுட்டுக்கொன்றுவிட்டு தப்பியோடும்படி உத்தரவிட்ட "சீலன்", "ஆனந்த்". திருநெல்வேலித் தாக்குதலுக்கு தலைமை தாங்கிசென்று தாக்குதலின்போது வீரமரணமடைந்து தமிழீழவிடுதலைப்போராட்டத்தின் மாபெரும் திருப்பு முனையை உருவாக்கி "செல்லக்கிளி அம்மான்".

8.3ம் ஆண்டுக்குப்பின்னர் இயக்கத்தில் சேர்ந்த இளைஞர்களுக்கு சங்கர், சீலன், செல்லக்கிளி போன்றோரின் தியாகங்கள் மேலும் மேலும் உறுதியை அளித்தது. ராணுவத்திடம் சிக்கும் நிலை ஏற்பட்டபோது "சயனைட்" அருந்தி வீரமரணமடைந்து எதிரியிடம் சிக்காமல் புதியதொரு சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தான் "பசீர்" என்ற செல்வம். அன்று ஆரம்பித்து இன்றுவரை பல நூறு விடுதலைப்புலிகள் எதிரிகளிடம் சிக்கும் நிலை ஏற்பட்டபோது "சயனைட்டை" அருந்தி விடுதலைப்புலிகளின் உறுதியை உலகுக்கு அறிவித்துள்ளனர். எமக்கு ஆதரவளித்தமக்களை எதிரிக்கு நாமே சித்திரவதையில் சொல்லாமல் இருப்பதற்காகவும், இயக்கரகசியத்தை காப்பதற்காகவும் எம இயக்கவீரர்கள் அருந்திய இந்த சயனைட் மக்களை எம்மீது நம்பிக்கை கொள்ளசெய்தது. "சயனைட்" எமது இயக்கத்தின் குறியீடாகவும், தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அடையாளமாகவும் வெளிப்பட்டுள்ளது. இன்னும் பல மகத்தான தியாகங்களை மனிதகுலவரலாறு காணாத தியாகங்களை விடுதலைப்புலிகள் புரிந்துள்ளார்கள்.

முகாமில் சகபோராளிகளுடன் உணவருந்திக்கொண்டிருந்த வேளையில் தனதுடைய கைக்குண்டின் "கிளிப்" தற்செயலாக கழன்றுவிட்டதை உணர்ந்து தன்னுடைய தோழர்களை காப்பதற்காக கைக்குண்டின் மீது குப்புறப்படுத்து சின்னாபின்னமாகிய "அன்பு". இயக்கத்துக்கு ஆயுதங்களும், தளபாடங்களும் கொண்டுவரும் வழியில் கடலில் கடற்படையால் தாக்கப்பட்டு படகுடன் எரிந்து கடலோடு கலந்து விட்ட கடற்புலிகள். ட்ரக் நிறைய வெடிமருந்து ஏற்றிக்கொண்டு நெல்லியடிமுகாமினுள் செலுத்தி நெல்லியடி முகாமை தகர்த்து தானும் மரணித்த கரும்புலி "மில்லர்". பத்து தினங்களாக தண்ணீர் கூட அருந்தாமல் தர்மயுத்தம் புரிந்து வீரமரணமடைந்த "திலீபன்". திருமணமாகி ஒருமாதம்தான் ஆகி இருந்த போதும் "எம்மை விசாரணை செய்ய சிங்கள அரசுக்கோ, இந்திய அரசுக்கோ உரிமையில்லை" என்று முழக்கமிட்டு சயனைட் அருந்திய "குமரப்பா", "புலேந்திரன்" மற்றும் பன்னிருவர்......


இப்படியான ஆயிரக்கணக்கான விடுதலைப்புலிகளின் தியாகங்கள்தான் இன்று எமது போராட்டத்தை வெற்றியின் பாதையில் வீறுநடை போட வைக்கின்றது. இவர்களின் வீரமரணங்கள் என்ற படிக்கட்டுகளில் ஏறித்தான் நாம் எமது இலட்சியத்தை அடையமுடியும். தங்களின் மரணங்களை அர்த்தமுள்ளவையாக்கிய இவர்கள் என்றும் எம் நெஞ்சங்களில் வாழ்வார்கள். இவர்கள் எந்த இலட்சியத்தை அடைவதற்காக தம்முடைய உயிரை அர்ப்பணித்தார்களோ அந்த உன்னதமான இலட்சியத்தை அடையும் வரை நாமும் உறுதியுடன் பாடுபடுவோம். நாம் சோர்வடையும் நேரங்களில் உறுதியுடன் இறுதிவரை போரிட்டு மடிந்த வீர விடுதலைப்புலிகளின் வரலாறுகள் எமக்கு ஊக்கமாய் அமையட்டும்.

"இலட்சிய வேங்கைகள் இறப்பதில்லை, விடுதலைப்புலிகள் வீழ்வதில்லை"

–செய்திக்கதிர்" –
டென்மார்க்



A Bagirathan (Selvam)



www.padippakam.com

# உலகின் பார்வையில்...

. ஆனால் ஒரு தேசத்தின் எழுச்சியின் முன் நிற்க முடியாது என்பதை அவர்கள் உணர்ந்து ஒப்புக்கொண்டார்கள்.

KULDIP NAYAR
CURRENT July 1 - 7 1989

இந்திய வீரர்கள் தங்கள் அதிகாரிகள் மீது மரியாதை இழந்து போகிறார்கள். ஒவ்வொரு நாளும் வெளியே புறப்படும்போது விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகளைச் சந்தித்துவிடக் கூடாது என்று கடவுளை வணங்கிவிட்டே புறப்படுகிறார்கள்.

இந்திய அமைதிப் படையை இறைவன் காப்பாற்றுவானாக.

OPINION
(By an IPKF veteran)
India Week
May 26—Jnne 1 1989

வவுனியா காடுகளில் அண்மையில் நடந்த பல சண்டைகளும்- ஏனைய நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட மரணக் கிடங்குகளின் விளைவுகளும் - அமெரிக்கப் படைகளுக்கு வியட்நாம் ஏற்படுத்திய அச்சத்தை விடக் கூடிய அச்சத்தையே இந்திய அமைதிப்படைக்கு விளைவித்துள்ளன.

INDRANIL BANERJIE
Sunday 14—20 May 1989

இன்று வயது வந்த இளைஞர்கள்-பெண்கள்- ஏன் - சிறுவர்கள்கூட கடுமையாக - மூர்க்கத்தனமாக அங்கே போராடுகிறார்கள். நம்மால் ஒரு தீர்வைக் காண முடியவில்லை. எதிரியைத் துவக்கத்திலேயே முறையாக நாம் கணிக்க முடியாமல் போனதால் இன்று நமது பல உயிர்களை நாம் இழந்து நிற்கிறோம்.

Rear Admiral
SATYINDRA SINGH (Retd)
Indian Express 28-4-1989

இந்திய அமைதிப்படை திரும்பினால் திரும்பவும் விடுதலைப் புலிகள் தங்களை உறுதியாக்கிக் கொண்டு சிறீலங்காப் படைகளை மோதத் தொடங்கிவிடுவார்கள் என்றே பாதுகாப்பு ஆய்வாளர்கள் கணிக்கிறார்கள். அதுமட்டுமல்ல - குறுகிய காலத்துக்குள் அதன் பின்பு அவர்கள் தனிநாடு அமைத்தும் விடுவார்களாம்.'

**ஜி. கே. சிங்**
The Week
Jan 29—Feb 4 1989

எல்லாம் சரியாகத் திட்டமிட்டு - இந்தியப்படை ஒரு தாக்குதலுக்கு ஏற்பாடு செய்த பின்பு - விடுதலைப் புலிகளின் கெட்டித்தனமான உளவுத் துறை அதை எப்படியோ அறிந்துவிடுகிறது. அந்தச் சேதி உள்ளூர் எல். ரி. ரி. ஈ. தளபதிக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது.

BHARRT KARNAD
India Week
28 April 4 May 1989

**விடுதலைப் புலிகளின் பலமும் ஆற்றலும் அதிகரித்துள்ளன**

'புலிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்டோம்' என்று இந்திய அமைதிப்படை அடிக்கடி சொல்லிவருகிறது. ஆனால் இது முழு அளவில் உண்மை அல்ல. பிரபாகரன் இந்தியப் படைகளினால் பிடிக்கப்பட முடியாதவராக நழுவிக் கொண்டே இருக்கிறார். விடுதலைப் புலிகளிடம் படை வீரர் பற்றாக்குறையும் இல்லை. அதுமட்டுமல்ல தாக்குகின்ற - அழிக்கின்ற ஆற்றலும் முன்பிருந்ததை விட அவர்களிடம் இப்போது கூடியே இருக்கிறது,

DILIP BOBB
INDIA TODAY
May 15 1989

களத்திலிருந்து

# ஒரு வீராங்கனையின் கடிதம்

தமிழீழம்
30.6.89

அன்புள்ள அம்மா,

நான் 1985-ம் ஆண்டு முதலுதவி நிலையம் என்றும், மாதர் சங்கம் என்றும் வெளியே புறப்பட்டபோது கொஞ்சமேனும் தயக்கம் இன்றிப் பல விதமாகப் பேசியவர்கள், இன்று நாணித் தலை குனியும் நிலையில் எங்கள் நாட்டின் நிலை உள்ளது.

அம்மா, நீங்கள் கூறுவீர்கள் எங்களுக்குப் பாதுகாப்பு அப்பா, அண்ணா, கணவன் என்று. இன்று இவர்கள் முன்னிலையிலேயே எம்மைக் கொன்றும், கடித்துக் குதறியும் வருகின்றனர். இந்த அந்நிய கழுகுகளிடம் இருந்து எம்மைப் பாதுகாக்க நாம்தான் ஆயுதம் ஏந்தவேண்டும். இனியும் எங்கள் கண் முன் எங்கள் குடும்பத்தவர்கள் தாக்கப்படுவதோ அல்லது நம்மை அழிக்கும்போது இயலாது அழுது மன்றாடிக் கொண்டிருப்பதோ நீடிக்கக் கூடாது. எங்கள் மக்களைத் தாக்கும் கரங்கள் துண்டாடப்பட வேண்டும். எங்கள் மண்ணிலே படும் எதிரியின் கால்கள் வெட்டப்பட வேண்டும்.

அம்மா, ஏற்கெனவே நீங்கள் இரு ஆண்பிள்ளைகளைப் பறிகொடுத்தும், இன்று தங்கை அமுதாவையும் அனுப்பத் தயாராக இருப்பதை அறிந்தபோது எமது இனத்தின் விடிவு வெகு தூரம் இல்லை என்பது புரிகிறது. உங்களைப் போல பல தாய்மார்கள் முன்வரும் செய்திகள் எமது கரங்களை வலுப்படுத்துகின்றன. மக்களது போராட்ட எழுச்சிகள் எமது கால்களை வேகமாக நடக்க வைக்கின்றன.

அம்மா, பெரியண்ணாவை 86-ம் ஆண்டு நிகழ்ந்த ஊர் சுற்றி வளைப்பின் போது சந்தேக நபர் என்ற பெயரில் அழைத்துச் சென்றார்கள். சில நாட்களில், அவர்கள் அண்ணாவைக் கொன்ற செய்தி சந்தேகம் இன்றிக் கிடைத்த போது நானும் குளறி அழுத சம்பவம் இன்றும் என் நெஞ்சில் பசுமையாக உள்ளது. ஆனால் 87-ம் ஆண்டு சின்னண்ணாவின் வீரமரணச் செய்தி கேட்ட போது அழுகை என்பது வெளிவரவில்லை. பாசத்தினால் உள்ளம் குமுறினாலும், உதடுகள் 'சின்னண்ணா' எனத் துடித்தாலும் வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்ணீரே மனத்தின் வேதனைகட்கு ஒத்தடம் இட்டது. இம் மாற்றங்கள் எம் இனம்பட்ட காயத்தின் வடுக்களே. சின்னண்ணாவின் இழப்பினை எமது சுதந்திர தாகம் மறைத்துவிட்டது. அவரது இழப்பு இறப்பில்லை. இப் பிரிவு, அர்த்தம் உள்ளது. அவரது இறப்பு அவர் ஏற்றுக்கொண்ட சுதந்திர வாழ்வு. எம் இனத்தின் விடிவிற்காகப் போராடும்போது நேரடி மோதலில் துப்பாக்கிக் குண்டொன்றை ஏற்று அவர் தழுவிய மரணம் வீரமரணம். வாழ்ந்தால் சுதந்திரமாக எமது உரிமைகளுடன் எமது தாயகத்தில் வாழவேண்டும். அன்றேல் அந்தச் சுதந்திரத்திற்காகப் போராடி மடிவதே மேல்.

எமது உரிமைகள் உறுதிப் படுத்தப்படல் வேண்டும். இது

எமது சுதந்திர தாயகத்திலேயே உறுதிப்படுத்தப்படும் என்பதனைக் கடந்த கால வரலாறுகள் எமக்குத் தெளிவாக்குகின்றன. நாம் போராடுவது எமது இழந்த உரிமைகளுக்காகவே. இம்மண் எங்கள் சொந்த மண். நாம் எம்மையே ஆண்ட மண். இன்று எங்கள் மண்ணிலேயே நாங்கள் ஒடுக்கப் படுகிறோம். இம் மண்ணின் மீட்பே எமது சுதந்திரத்தை நிதர்சனமாக்கும் நாளையு எமது மண்ணின் விடிவிற்காகவும், எம் இனத்தின் சுதந்திரத்திற்காகவும், குழந்தைகளின் மகிழ்விற்காகவும் எமது போராட்டத்தினை நாம் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்வோம்.

அம்மா, அக்காவின் சுட்டிப் பயல் குகனும், செல்ல மகள் மைதிலியும் வளர்ந்துவிட்டார்கள் என எண்ணிப் பார்க்கும்போது மகிழ்ச்சியினால் மனம் துள்ளுகிறது. குகன் பாலர் பாடசாலை போவதாக அறிந்தேன். அவன் பிஞ்சுக் கரங்களிலே விளையாட்டுத் துப்பாக்கியுடன் திரிவதனை அறிந்தபோது என் கைகள் வலுவடைகின்றன. அவன் கூறும் "ஆமிக்காரனைச் சுட்டுச் சுட்டுத் துரத்துவேன்". என்ற வார்த்தைகள் என் செவியில் இப்போதும் ஒலிக்கின்றன. என் கண்கள் பனிக்கின்றதம்மா. மைதிலியும் தன் மழலை மொழிகள் வீடு முழுக்கக் கேட்கக் கலகலத்துத் திரிவதாக அறிந்தேன். "மாமாவையும், சித்தியையும் போலவேதான் நானும்..." என்று கூறிக்கொண்டு இடுப்பிலே விளையாட்டுக் கைத்துப்பாக்கியையும் செருகிக்கொண்டு ஒளித்து விளையாடுகிறார்களாம்

அம்மா, நிச்சயம் இவர்கள் களம் வரவேண்டாம். நாம் மீட்கும் எமது தாயகத்தைக் காப்பதற்கு இவர்கள் தயாராகட்டும். எங்கள் மழலைகள் களத்திற்கு வரவேண்டாம். எமது விடுதலை எங்களாலேயே மீட்கப்பட வேண்டும். இப் போராட்டம் அடுத்த சந்ததிக்கும்...வேண்டாம். எங்களோடு முடிவுறட்டும்.

அம்மா, உங்கள் பங்களிப்புகள் எம் இனத்தின் விடுதலையினை விரைவு படுத்தும்.

இப்படிக்கு,
அன்பு மகள்,
சுரபி

★

(மஞ்சுளாதேவி என்று அழைக்கப்படும் 'சுரபி' என்ற இந்த விடுதலை வேங்கை இந்திய படையுடனான மோதலில் வீரமரணமடைந்தார்)

www.padippakam.com

தமிழீழ விடுதலைப் புலிகள்
*Liberation Tigers of Tamil Eelam*
கனடாக்கிளை

# தியாகிகளின் கல்லறைகள் ஆராதனைக்குரிய ஆலயங்கள்

இன்று நடைபெறுகின்ற "வீரவணக்க நாளும் கலை மாலையும்" என்ற நிகழ்ச்சி யதார்த்தத்தின் தேவை கருதி நடாத்தப்படுகின்ற ஒரு நிகழ்வே. விடுதலை அடைந்த ஒவ்வோர் இனமும் தத்தமது தேசிய வீரர்களை நினைவு கொள்கின்ற இந்த வகையில் தமிழினத்தின் விடிவிற்காக தம் உயிரை அர்ப்பணித்த எம்வீரவேங்கைகளுக்கு. எம்மக்களின் உரிமைக்காக கொலைவெறி ஆட்சியில் வீரமரணம் அடைந்த எம்தியாக சீலர்களுக்கு. எம்மண்ணின் விடிவிற்காக களம் பல கண்டு தம் உயிரைமாய்த்த வீரர்களுக்கு. விடுதலையா? அல்லது வீரமரணமா? என்ற உயரிய இலட்சியத்தில் போர்முரசு கொட்டிய வீரமறவர்களுக்கு. உலகத்தமிழர் வரலாற்றில் புதுவரலாறு படைத்த நாயகர்களுக்கு இக்கலைமாலை நிகழ்ச்சியில் எம்வீரவணக்கத்தை தெரிவிக்கின்றோம்


வெளிநாடு ஒன்றான டென்மார்க்கில் வாழும் தமிழ்மக்களிடையே இந்நிகழ்ச்சி நிகழ்த்தப்படுவதை தமிழீழ விடுதலைப்புலிகளின் கனடாக்கிளை வரவேற்கின்ற அதே வேளை, இந்நிகழ்ச்சி சிறப்புற அமையவேண்டுமென தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

வெளிநாடுகளில் அகதிகள் என்ற போர்வையில் நவீன அடிமைகளாக வாழாது நாம் ஓர் இனம், எமக்கென்று ஒரு மொழி, எமக்கென்று ஒரு தாயகம் என்ற உணர்வில் போராடிநின்று தமிழினத்தின் தியாகத்தை, வீரத்தை உலக அரங்கில் ஏற்றி வைத்த எம் தியாகிகளை நாம் மறப்போமானால்- எம்மை வரலாறு மன்னிக்கமுடியாது.

-புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்-
தமிழீழ விடுதலைப் புலிகள்
கனடாக் கிளை - 28-10-1989.

## உயிருக்கு சாவு உண்டு!
## வீரமறவர்களே!
## நீங்கள் வித்தியாசமானவர்கள்!
## உங்கள் சாவுக்கு உயிர் உண்டு

www.padippakam.com



**Liberation Fighter**

*Sometimes my back feels heavy,*
*my machine gun cold as steel.*
*But death is the friend of those*
*who love deeply; so I go fearless.*

*Trudging the hillsides with the heavy*
*tread of my belief,*
*I struggle to remain hidden*
*while most men yearn to be known.*
*I am a shadow.*
*Only my actions are real*
*an explosion that rocks a general's sleep,*
*or a missing soldier.*
*"My people are my mountains"*
*and they hide me in their caves.*

*One day, it may happen*
*that I will be taken*
*quietly, stealthily to the reverside*
*by uniformed men, the general's men*
*and be destroyed;*
*without witness without audience.*
*But they will only destroy a shadow.*

*No poets will write about me;*
*but the villagers will remember me*
*my friends in the chai shop*
*wondering why I threw up a wall*
*of silence around them.*

*My body will never be found.*

*At night, I'll rise with the water*
*seep down as mist over the valleys.*

*And when my friends are thirsty,*
*they will find me glittering in a well.*
*They will drink me up*
*and continue the fight.*

–MAHMOOD JAMAL.
From 'SILENCE INSIDE
A GUN's MOUTH'

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




JOHANSEN • HOLSTEBRO • 97 40 22 33

படிப்பகம்